COVID-19 VACCINATION

# LET'S DO THIS – Tamil

NSW GOVERNMENT

## (5 முதல் 11 வரைக்குமான வயதுள்ள) குழந்தைகளுக்கான COVID-19 தடுப்பூசியேற்றத்திற்காக

இப்போது முன்பதிவு செய்யுங்கள்

### COVID-19-இற்கு எதிரான தடுப்பூசிகளை 5 முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகள் ஏன் இட்டுக்கொள்ளவேண்டும்?

COVID-19 என்பது தீவிர நோயையும் மரணத்தையும் ஏற்படுத்தக் கூடும் என்பதோடு மட்டுமல்லாமல், நீண்ட கால உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடிய ஒரு வைரஸ் ஆகும். ஆட்களுக்கிடையே இதனால் வெகு விரைவில் பரவ இயலும், மற்றும் இதற்கான அறிகுறிகள் சிலவே இருக்கும், அல்லது அறிகுறிகள் இல்லாமலேயே இருக்கும், இதனால் இந்த வைரஸ்-ஐ நீங்கள் மற்றவர்களுக்குக் கடத்துவதற்கு முன்பாக உங்களுக்குத் தொற்று ஏற்பட்டிருப்பதை நீங்கள் தெரிந்துகொள்வது சிரமமாக இருக்கும்.

வயதுவந்தவர்களில் உள்ள தொற்றை விட குழந்தைகளில் காணப்படும் COVID-19 தொற்று பெரும்பாலும் மிதமானதாகவே இருக்கும் என்றாலும், குழந்தைகளுக்குத் தடுப்பூசி இடவேண்டும் என்பதற்கான வலுவான காரணங்கள் உள்ளன:

- நோயெதிர்ப்புத்-திறன் முறைமைக்குத் தடுப்பூசிகள் உதவுகின்றன. உங்களுடைய பிள்ளைக்குத் COVID-19 தடுப்பூசியை இடுவதன் மூலம் நீங்கள் அவருக்குக் தொற்று ஏற்படுவதிலிருந்தும், சாத்தியமான நீண்ட கால விளைவுகளிலிருந்தும் அவரைப் பாதுகாப்பீர்கள்.
- நோய்த்தொற்றுப் பரவலைக் குறைக்க உதவுவதன் மூலம், பாதிப்படையும் நிலையிலுள்ள அனைத்து வயதினரும் உள்ளடங்க, நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினர் ஆகியோரைப் பாதுகாக்க தடுப்பூசியேற்றம் உதவுகிறது.
- குழந்தைகள் பாடசாலைக்குத் தொடர்ந்து வரவும், அவர்களுடைய கல்விக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாத சமூக நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபற்றவும் தடுப்பூசியேற்றம் உதவுகிறது.

உலகைச் சுற்றியுள்ள பல மில்லியன் கணக்கான குழந்தைகள் ஏற்கனவே COVID-19 -இற்கு எதிராகப் பாதுகாப்பான முறையில் தடுப்பூசிகளை இட்டுக்கொண்டுவிட்டனர். COVID-19 காரணமாகப் பாரதூர நோய்க்கு ஆளாவதிலிருந்து குழந்தைகளைத் தடுப்பூசியேற்றம் மிகச் சிறப்பாகப் பாதுகாக்கிறது என்றும், உங்களுடைய குடும்பத்தினரைப் பாதுகாப்பாகவும் நலமாகவும் வைத்திருக்க இது உதவுகிறது என்றும் ஆய்வு காண்பிக்கிறது.

### வயதுவந்தவர்களுக்கு இடப்படும் அதே தடுப்பூசிகளும், மருந்தளவுகளும் குழந்தைகளுக்கும் இடப்படுமா?

**இல்லை.** 5 முதல் 11 வரைக்குமான வயதுள்ள குழந்தைகளுக்காக, 8 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும் இரண்டு மருந்தளவுகளைக் கொண்ட ஒரு விசேடமான Pfizer (Comirnaty) குழந்தை-மருத்துவத் தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5 முதல் 11 வரைக்குமான வயதுள்ள குழந்தைகளில் இடப்படும் Pfizer தடுப்பூசி மருந்தளவானது 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோருக்குக் கொடுக்கப்படும் மருந்தளவில் மூன்றில் ஒரு பங்கினைக் கொண்டதாகும். 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோருக்கு இடப்படும் மருந்தளவு கொடுக்கும் அதே உயரளவுப் பாதுகாப்பினை இந்த வயதினரில் பயன்படுத்தப்படும் சிறு அளவிலான மருந்தளவு கொடுக்கும்.

### வயதுவந்தவர்களுக்கு ஏற்படும் அதே பக்க விளைவுகள் குழந்தைகளுக்கும் இருக்குமா?

**ஆம்.** COVID-19 தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்ளும் வயதுவந்தவர்களுக்கு ஏற்படும் அதே பக்க விளைவுகள் குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடும்.

இந்தப் பக்க விளைவுகள் மிதமானவை, அத்துடன் ஓரிரு நாட்களில் இவை மறைந்துவிடும், மற்றும் இவற்றில் பின் வருவன உள்ளடங்கக் கூடும்:

- தலைவலி
- காய்ச்சல் மற்றும் குளிர்க்-காய்ச்சல்கள்
- அசதி / களைப்பு
- தசை வலி, மற்றும் கையில் ஊசி இடப்பட்ட இடத்தில் வலி

சிறு பக்க விளைவுகள் பொதுவானவை, மற்றும் தடுப்பூசியின் காரணமாக நோயெதிர்ப்பு முறைமை பதில்-வினை புரிகிறது என்பதை இது காண்பிக்கிறது. இந்தத் தடுப்பூசிகளின் காரணமாக ஏற்படும் அதி பாரதூரப் பக்க விளைவுகள் அரிதானவை, எனினும் COVID-19 தொற்றின் காரணமாக ஏற்படக் கூடிய பக்க விளைவுகள் அதிலும் பாரதூரமானதாகும். பக்க விளைவுகள் தொடர்ந்தாலோ அல்லது நீங்கள் கவலைப்பட்டாலோ, உங்கள் மருத்துவரிடம் (GP) பேசுங்கள்.

> nsw.gov.au எனும் வலைத்தலத்தில் உங்களுடைய COVID-19 தடுப்பூசியேற்றத்திற்கான முன்பதிவினை இன்று செய்யுங்கள்.


© NSW Ministry of Health December 2021

### பாரதூரமான பக்க விளைவு ஏற்படும் ஆபத்து இருக்கிறது என்பது என் பிள்ளைக்கு நான் தடுப்பூசி இடக்கூடாது என்பதைக் குறிக்குமா?

**இல்லை.** ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் அனைத்துத் தடுப்பூசிகளும் சிறந்த பாதுகாப்புத் தன்மைகளைக் கொண்டவை, அத்துடன் பயன்பாட்டிற்கென அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக 'மருத்துவ சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்' (Therapeutic Goods Administration (TGA)) மற்றும் 'ஆஸ்திரேலியத் தடுப்பூசியேற்றத் தொழில்நுட்ப அறிவுரைக் குழு' (Technical Advisory Group on Immunisation (ATAGI)) ஆகிய அமைப்புகளினால் இவை கடுமையாகச் சோதிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் 5 மில்லியனுக்கும் மேற்பட்ட, மற்றும் உலகெங்கிலும் உள்ள இன்னும் பல மில்லியன் கணக்கான 5 முதல் 11 வரைக்குமான வயதுள்ள குழந்தைகள் இன்று வரை பாதுகாப்பான முறையில் COVID-19 தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொண்டுள்ளனர்.

### COVID-19 தடுப்பூசியேற்றம் என் பிள்ளையின் வளர்ச்சியை அல்லது அவருடைய எதிர்கால இனவிருத்தித் திறனைப் பாதிக்குமா?

**இல்லை.** COVID-19 தடுப்பூசி ஒன்று ஒரு குழந்தையின் வளர்ச்சியையும், விருத்தியையும் பாதிக்கும் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

COVID-19-இன் மூலம் ஏற்படும் நீண்ட-கால தாக்கங்கள் உடல்நலம் மற்றும் பொது-நலத்தின் மீது நீடித்த பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். தடுப்பூசியேற்றத்தினால் பொதுவாக ஏற்படக்கூடிய மிதமான பக்க-விளைவுகளை விட இந்த வைரஸ் தொற்றிலிருந்து சிக்கல்கள் ஏற்படுவதற்கான ஆபத்து அதிகமாகும்.

### என்னுடைய பிள்ளைக்கு ஏற்கனவே COVID-19 ஏற்பட்டிருந்தாலும் அவர் தடுப்பூசியை இட்டுக்கொள்ள வேண்டுமா?

**ஆம்.** ஏற்கனவே COVID-19 தொற்று ஏற்பட்டுள்ள குழந்தைகள் அவர்களுடைய சுகவீனத்திலிருந்து  குணமடைந்தவுடன் இன்னொரு தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்ள வேண்டும்.

### என்னுடைய சம்மதம் இல்லாமல் என்னுடைய பிள்ளைக்குத் தடுப்பூசி இட இயலுமா?

**இல்லை.** 5 முதல் 11 வரைக்குமான வயதுள்ள குழந்தைகள் COVID-19 தடுப்பூசி ஒன்றைப் பெறுவதற்கு பெற்றோர் அல்லது சட்டரீதிப் பாதுகாவலர் ஒருவர் சம்மதம் அளிக்கவேண்டும்.

முன்பதிவு செய்யும் பொழுதும், மீண்டும் சந்திப்புவேளையின் பொழுதும் சம்மதம் தேவைப்படும். பெற்றோர் அல்லது பாதுகாவலர் சந்திப்புவேளையின் பொழுது குழந்தையுடன் சமூகமாக இயலவில்லை என்றால், அவர்களுக்குப் பதிலாக சந்திப்புவேளையின் பொழுது சமூகமளிப்பதற்காக வயதுவந்த மற்றொருவரை முன்பதிவு செய்யும் பொழுது நியமிக்கலாம்.

சந்திப்புவேளை தினத்தன்று இன்னொருவர் சார்பாக சம்மதம் அளிக்கும் நபருடைய அடையாளம் மற்றும் சம்மதம் அளிப்பதற்கான அனுமதி ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு, உடன்-வரும் வயதுவந்த நபரைப் பற்றிய விபரங்கள் முன்பதிவு செய்யும் பொழுது கொடுக்கப்பட வேண்டும்.

சம்மதம் பறிய மேலதிகத் தகவல்களுக்கு Vaccination consent FAQs for parents and guardians எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்

### COVID-19 தடுப்பூசியேற்றம் குழந்தைகளுக்குக் கட்டாயமானதா (பாடசாலை மற்றும் விளையாட்டுகள் உள்ளடங்க)?

**இல்லை.** COVID-19 -இற்கு எதிரான தடுப்பூசியேற்றம் கட்டாயமானதல்ல, ஆனாலும் இது வலுவாய் ஊக்குவிக்கப்படுகிறது.

பாடசாலை நடவடிக்கைகள், அல்லது சமூக விளையாட்டு நடவடிக்கைகளில் பங்குபற்ற COVID-19 தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்ள வேண்டும் என்ற  தேவைப்பாடு எதுவும் குழந்தைகளுக்கு இல்லை.

### ஊக்கத் தடுப்பூசி ஒன்றை என்னுடைய பிள்ளை இட்டுக்கொள்ளலாமா?

**இல்லை.** குறைந்த வயதுடைய இளையோரில் ஆரம்ப-நிலைத் தடுப்பூசிகள் வலுவானதொரு நோயெதிர்ப்புத் திறனை உருவாக்கும்.

இந்த வயதினருக்கு ஊக்க ஊசி ஒன்று தேவைப்படுமா என்பதை ATAGI வருங்காலத்தில் கருத்தில் கொள்ளும்.

### COVID-19-இற்கு எதிரான தடுப்பூசிகள் குழந்தைகளுக்குப் பாடசாலையில் இடப்படுமா?

**இல்லை.** உங்களுடைய பொது-மருத்துவர் (GP), உள்ளூர்ப்-பகுதி மருந்துக்கடை, 'ஆபொரிஜினி பூர்வகுடிக் கட்டுப்பாட்டு சுகாதார சேவை' (Aboriginal Community Controlled Health Service) அல்லது 'NSW சுகாதாரத் தடுப்பூசி கிளினிக்' ஒன்றின் மூலம் உங்களுடைய பிள்ளைக்கான COVID-19 தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

### நான் எப்படி முன்பதிவு செய்வது?

தமது பிள்ளைக்கான தடுப்பூசியேற்ற முன்பதிவு ஒன்றைக் கூடிய சிக்கிரம் செய்யுமாறு பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**இணைய-வழியில் இப்போது முன்பதிவு செய்யுங்கள்** - www.nsw.gov.au/COVID-19/vaccination/get-vaccinated

**முன்பதிவு செய்வதற்காகத் தொலைபேசி மூலம் அழையுங்கள்:** முன்பதிவு உதவித்-தொலைபேசி: 1800 57 11 55 / மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை (TIS): 131 450


© NSW Ministry of Health December 2021